Ti Ta
Nb Zr Ss
Ni Pt

**Ti Anode Fabricators Pvt. Ltd.**
*An ISO 9001 : 2015 Company*

Tiaano® since '92 — Innovation In Inert Metals

#48, Noothanchary, Madambakkam, Chennai - 126. Ph.: +91 44 2278 1148, +91 94445 69900 Fax: 2278 1362 Email: marketing@tiaano.com Web: www.tianode.com

# "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

## GOAL 2017-2018

- **Endeavour** : QUALITY
- **Turnover Target** : 120% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** : 100% ↓

## TESTIMONIALS

- **Customers…**
  - Up to Jun.17 : 1040 Nos.
  - Up to May 17 :1037 Nos.
- **Performance Jul. 2017…**
  - Turnover growth : 7.75%
  - Employment growth : -4.05%
  - 100% Attendance : 4.22%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. V. P. Jeyakumar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano (Innovation In Inert Metals) – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil (Results for environment) – Water Treatment Equipments.

HydroGen (Go Green) – HHO Generators

Titanictrade (We deliver value chain) – Portal for Exotic Metals

Tiaano Vidyashrm – Tiaano Vidyashrm (CBSE Curriculum)




## உதவி

பார்வைக்கு நன்றாக தோற்றமளிக்கும் ஒருவர் நம்மிடம் உதவி கேட்டால் நாம் பெரும்பாலும் உடனே செய்ய முயல்வோம். அதே நேரம் வெளிப்பார்வைக்கு மோசமாக இருக்கும் ஒருவர் உதவி கேட்டால், நிறையபேர் அதை பொருட்படுத்தமாட்டார்கள்.

நீங்கள் பார்த்திருக்கலாம். இல்லாதவர்கள் யாசகம் கேட்கும் போது "இல்லை" என்ற பதிலைக்கூட வாய்மொழியாகச் சொல்ல சிலர் தயங்கி, முகத்தை திருப்பிக் கொள்வார்கள், அல்லது அப்பால் நகர்ந்து விடுவார்கள். மற்றவர்களிடம் யாசித்து வாழும் நிலையில் அவர்கள் இருந்தாலும் அவர்களும் மனிதர்கள் தானே! முடிந்தால் நாம் உதவி செய்யலாம், இல்லையென்றால் அதை மரியாதையாகச் சொல்லிவிடலாம்.

ஒரு தலைவர் இருந்தார், அவர் மிகவும் செல்வாக்கு மிக்கவர். ஒரு முறை அவர் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார். அவருடனே அவரது நண்பர்களும், உதவியாளர்களும் வந்தார்கள்.

ஒரு சிறிய ரயில் நிலையத்தில் வண்டி நின்றது. ஒரு ஏழை மூதாட்டி தலைவர் இருந்த அந்த ரயில் பெட்டியில் ஏறினார். அவர் மிகவும் எளிய ஆடைகளை அணிந்திருந்தார். அந்த மூதாட்டிக்கு நேராக நிற்பதற்கான சக்தி கூட இல்லை. ஆனால், தலைவர் இருப்பதால் அந்தப் பெட்டியில் நல்ல கூட்டம் இருந்தது. மூதாட்டி அமர்வதற்கு அங்கே ஒரு இருக்கை கூட இல்லை. தான் எழுந்து அவர்களுக்கு இருக்கை கொடுக்கவும் அங்கே யாரும் தாயாராக இல்லை. அங்கிருந்த அனைவரும் மூதாட்டியைக் கண்டு கொள்ளாதவர்கள் போல இருந்தார்கள்.

தலைவர் அமர்ந்திருக்கும் இடத்திற்கு அருகே மூதாட்டி வந்தார்கள். அவர்களை பார்த்ததும் தலைவர் எழுந்தார், மூதாட்டியின் கைப்பிடித்து தான் அமர்ந்திருந்த இடத்தில் அமர வைத்தார். மூதாட்டியும் வசதியாக அமர்ந்து கொண்டார். தலைவர் நின்று கொண்டிருப்பதைக் கண்ட அவரது நண்பர்களும், உதவியாளர்களும் எழுந்து தலைவருக்கு இடம் கொடுக்க முன் வந்தார்கள்.

அப்போது தலைவர் அவர்களிடம் உறுதியாக சொன்னார்: "நன்றி! அந்த மூதாட்டிக்குக் கொடுக்க முடியாத இருக்கை எனக்கு வேண்டாம். நாம் மற்றவருக்கு உதவி செய்யும் போது நம் மனதில் சில எண்ணங்கள் தோன்றலாம். நம் உதவியை பெறுபவர் யார்? அவர் ஏழையா? பணக்காரரா? அவர்அழகானவரா இல்லையா? அவர் என்னபணி புரிகிறார்? என்றெல்லாம் நமக்கு எண்ணத் தோன்றலாம். இது போன்ற சிந்தனைகளுக்கு இடம் கொடுக்காமல், உதவி கோரும் எவரையும், உதவி செய்வதற்கான வாய்ப்பை நமக்குக் கொடுத்து உதவுபவராகவே நாம் கருத வேண்டும்.

நல்லதை நினைப்போம்! நல்லதைப் பேசுவோம்!
நல்லதைச் செய்வோம்! நல்லது தானாக வரும்!

*Complied By: Ms. P.E.Nancy*
*Director Admin*

## FUNCTIONAL WISHES



Happy Independence Day
15th August

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital<br>Tel: 22294565 |
| ESI Corporation | : Tambaram Dispensary<br>Tel: 044 2226 0194 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



Mr.Deenan.M — 3rd Aug.
*Production*

Ms.P. Sridevi — 7th Aug.
*Purchase*

Mr.P.Suresh Basker — 13th Aug.
*Facilitation*

Ms.Nancy.P .E — 19th Aug.
*Director*

Mr.M Vinoth Kumar — 22nd Aug.
*Coating*

Gayathri.J — 31st Aug.
*Receptionist*

**Best Wishes from Tiaano Employees**

### சளி நீங்க

1.வெற்றிலை சாற்றைக் கொதிக்க வைத்து பின்பு ஆற வைத்து நெற்றி பகுதியில் பற்று போட்டு வந்தால் ஓயாத சளி குறையும்.

2.மிளகு, வெற்றிலை, துளசி, மற்றும் கற்பூரவல்லிஇலை இவற்றை நன்கு கொதிக்க வைத்து வடிகட்டி 41 நாட்கள் குடித்து வர சளி நன்றாக குறையும்.

*Collected From Internet*

### கான்ஃபிடன்ஸ் கார்னர்

பொம்மைத் தொலைபேசியுடன் குழந்தை தன் கற்பனை சிநேகிதியுடன் பேசிக் கொண்டிருந்தது. மடியில் இருந்த பொம்மையை சுட்டிக்காட்டி, “இவளை வைத்துக் கொண்டு என்ன செய்வதென்று தெரியவில்லை. அடங்கவே மாட்டேன் என்கிறாள். சமாளிக்கவே முடியவில்லை”. இந்தக் கற்பனை உரையாடலைக் கேட்க குழந்தையின் தாய்க்கு அதிர்ச்சி.

தன் சிநேகிதிகளுடன் பேசுவது குழந்தையின் மனதில் இப்படியொரு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது புரிந்தது. குழந்தைகள் பற்றிய நம் விமர்சனங்கள் அவர்களை சோர்வடையச் செய்கின்றன.

குழந்தைகளோடு பேசும் போதும் குழந்தைகள் பற்றி பிறரிடம் பேசும்போதும் இந்த எச்சரிக்கை அவசியம்.

–கான்ஃபிடன்ஸ் கார்னர் என்ற நூலிலீருந்து தொகுக்கப்பட்டது

### பலவீனங்களையே பலமாக்கி கொண்டால் வெற்றி நிச்சயம்

பதினைந்து வயது சிறுவன் அவன். ஒரு மோசமான விபத்தில் தனது இடது கையை இழந்துவிட்டான். ஆனாலும் அந்த ஊனத்தையும் தாண்டி எதையாவது சாதிக்க வேண்டும் என்ற தாகம் அவனுக்குள் எழுந்தது.

அந்தப் பகுதியில் ஒரு புகழ் பெற்ற ஜீடோ குரு இருந்தார். அவரிடம் போய் விஷயத்தைச் சொன்னான். அவரும் புன்சிரிப்போடு அவனைப் பயிற்சியில் சேர்த்துக் கொண்டார். “இது தான் உன்னுடைய முதல் பாடம்” என்று சொல்லி ஒரு தாக்குதல் முறையைச் சொல்லிக் கொடுத்தார். மூன்று மாதங்கள் கடந்தன. அடுத்து..? குருவிடமே கேட்டான்.“இந்த ஒரே வித்தையை முழுசாகக் கற்றுக் கொள்!” என்றார் குரு. சில மாதங்களில் குரு இவனை ஒரு போட்டிக்கு அழைத்துச் சென்றார். முதல் இரண்டு ரவுண்டுகளில் எதிராளிகளை வீழ்த்தினான் சிறுவன். அவனுக்கே பிரமிப்பாக இருந்தது. மூன்றாவது சுற்றில் புகழ் பெற்ற இன்னொரு வீரனோடு அவன் மோத இருந்தது. ஆரம்பத்தில் கொஞ்சம் அடி வாங்கினாலும்,அவன் தான் ஜெயித்தான்.

இறுதிப் போட்டியில் புகழ் பெற்ற வீரனை சிறுவன் எதிர்கொள்ள நேர்ந்தது.“ மோசமாக அடி வாங்கி சிறுவன் செத்து விடுவானோ” என்ற பயத்தில் நடுவரே சிறுவனை விலகிவிடுமாறு வற்புறுத்தினார். ஆனால் குரு “விடுங்கள்’ அவன் ஜெயிப்பான் என்றார். போட்டி ஆரம்பித்தது. ஒரு கையில்லாத சிறுவன் தானே என்று அந்த புகழ் பெற்ற வீரன் அலட்சியம் காட்ட, தன் வழக்கமான தாக்குதலில் அவனையும் வீழ்த்தினான் சிறுவன். கோப்பையோடு திரும்பும் போது சிறுவன் கேட்டான். “ஒரே ஒரு தாக்குதலை மட்டும் கற்று வைத்திருக்கும் நான் எப்படி ஜெயித்தேன்?” குரு சிரித்தப்படி சொன்னார்.“ இரண்டு காரணங்கள் …ஒன்று ஜீடோவிலேயே மிகக் கடினமான தாக்குதலை நீ நன்றாகக் கற்றிருந்தாய். இன்னொன்று, நீ இப்படி தாக்கினால் எதிராளி உன்னை மடக்க, உன் இடது கையைத் தான் வளைக்க வேண்டும். அது உனக்கு இல்லை!”

*Collected from Internet*

### தாயை வணங்குவதால் கிடைக்கும் புண்ணியம் யாது?

ஆறுதரம் பூமியை வலம் வருதலும், ஆயிரம் தடவை காசியில் குளித்தலும், நூறு தடவை சேது ஸ்நானம் செய்தலும் ஆகிய இவற்றால் கிடைக்கும் புண்ணியம் தாயை பக்தி பூர்வமாக ஒரு தரம் வணங்கினாலே கிடைக்கும்.

–திருச்சிராப்பள்ளி ஶ்ரீஜயப்ப சங்கம் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது.

## தெரிந்து கொள்வோம்

**சப்போட்டாவின் பயன்கள்**

- ➢ சப்போட்டாவில் இயற்கையாகவே, சர்க்கரைச்சத்து அதிகம் உள்ளதால் மிகவும் சுவையானதாக இருக்கும்.
- ➢ சப்போட்டாவில் வைட்டமின் “ சி” மற்றும்“ஏ”சத்துகள் நிறைந்து உள்ளதால் சிறந்த நோய் எதிர்ப்பு சக்தியாக செயல்படுகிறது.
- ➢ சப்போட்டா நோய் தடுப்பு பொருளாகவும், உடலில் புற்று நோய்களை உருவாக்க கூடிய நச்சு கழிவுகளை நீக்க கூடியதாகவும் செயல்படுகிறது
- ➢ இரத்த ஓட்டத்தை விருத்தி செய்யவும் வயிற்று போக்கை தடுக்கவும் சப்போட்டா சிறந்த மருந்தாகும்.

**பீரூட்டின் நன்மைகள்**

- ➢ கர்ப்ப காலத்தில் மிக சிறந்த உணவாகிறது.
- ➢ நினைவாற்றலை அதிகப்படுத்துகிறது.
- ➢ உடம்பில் உள்ள நச்சு தன்மையை நீக்குகிறது.
- ➢ உடம்பிற்கு ஆற்றலை தருகிறது.
- ➢ காயங்களை ஆற்றுவதில் பெரும் பங்கு வகிக்கிறது.
- ➢ கொழுப்புச்சத்து மற்றும் இரத்த அழுத்தை குறைக்கிறது.
- ➢ இளமையில் முதுமையை தவிர்க்கிறது.
- ➢ எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.
- ➢ மலச்சிக்கலை குணப்படுத்த உதவுகிறது.
- ➢ உணவுச் செரித்தலில் பங்கு வகிக்கிறது.

*Collected From Internet*

**Speak 5 Lines to Yourself Every Morning**

1. I am the Best
2. I can do it
3. God is always with me
4. I am a winner
5. Today is my day.

*Dr. A.P.J Abdul Kalam.*

**உன்னை உயர்த்தும் தன்னம்பிக்கை**

புற்றுநோயை குணப்படுத்தப் பயன்படும் ரேடியத்தைக் கண்டு பிடித்தவர் மேரி கியூரி. இதைக் கண்டு பிடிக்கிற முயற்சியில் தளர்ச்சியும், சோர்வும் ஏற்படும் அளவிற்கு சிக்கல்களும் சிரமங்களும், இடர்பாடுகளும் இருந்தன. ஆனாலும் மேடம் கியூரி மிகுந்த தன்னம்பிக்கையோடு மீண்டும் மீண்டும் முயற்சி செய்து ரேடியத்தைக் கண்டுபிடித்தார். பல ஆண்டு கால ஆராய்ச்சியில் எந்த ஒரு காலகட்டத்திலும் அவர் தன்னம்பிக்கையை கைவிடவில்லை. இந்த கண்டுபிடிப்பு தனிப்பட்ட முறையில் அவருக்கு மட்டுமல்ல விஞ்ஞான உலகிற்கு கிடைத்த வெற்றியாக மாறியது. இக்கண்டுபிடிப்பிற்காக அவர் நோபல் பரிசு பெற்றார். பின்னர் போலோனியம் கண்டு பிடித்து அதற்கான நோபல் பரிசையும் பெற்றார்.

தாவரங்களுக்கு உயிர் உண்டு, உணர்ச்சி உண்டு என்றார், வங்காளத்தைச் சேர்ந்த ஜெகதீச சந்திர போஸ். 1907 ஆம் ஆண்டு இலண்டனில் ராயல் சொஸைட்டியில் உரையாட்டும் போது தனது விஞ்ஞான கண்டுபிடிப்பை வெளியிட்டார். தாவரங்களுக்கு உயிர் உண்டு என்பதை விஞ்ஞானிகள் ஏற்று கொள்ளவில்லை. எனினும் அவர் சோர்ந்து போகவில்லை. இந்தியாவுக்குத் திரும்பியதும் தனது ஆராய்ச்சியைத் தொடர்ந்து மேற்கொண்டார். தனது ஆராய்ச்சிக்கு தேவையான நுட்பமான கருவிகளை உருவாக்கி தாம் கண்டுபிடித்த விஞ்ஞான உண்மைகளை உறுதி படுத்தி கொண்டார். பிறகு மீண்டும் இலண்டன் சென்றார். இப்போது அவர் கண்டுபிடிப்பை விஞ்ஞானிகள் ஏற்று கொண்டனர். கடினமான உழைப்பும் விடாமுயற்சியும் தன்னம்பிக்கையுமே அவரிடம் இருந்தது. அதனால் வெற்றியாளராக வலம் வந்தார்.

அமெரிக்கரான ஜார்ஜ் ஈஸ்ட்மென் ஏழையாக பிறந்து வங்கி ஒன்றில் சில காலம் சாதாரண ஊழியராக இருந்தவர். படப்பதிவுதாளைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றியும் பெற்றார்.

மாபெரும் விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிசனின் நட்பு கிடைத்ததும் கொடாக் காமிராவை 1900 ஆம் ஆண்டு உருவாக்கினார். 1916 ஆம் ஆண்டு 16 எம் எம் காமிராவை உருவாக்கினார். படம் காட்டும் கருவியையும் அவர் தான் உருவாக்கினார்.

சாதாரண ஏழையாக இருந்த ஈஸ்ட்மென் விஞ்ஞானக் கருவிகளின் படைப்பாளியானார் என்றால், அவரிடம் எந்த அளவிற்கு தன்னம்பிக்கை இருந்திருக்கும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஏழை ஈஸ்ட்மென் மிக பெரிய பணக்காரராகவும் மாறினார்.

*Collected From internet*

**நம்பித்தான் ஆகவேண்டும்**

**5S (தொடர்ச்சி LXII)**

**அழுக்கு எது? சுத்தம் எது?**

இந்த எண்ணத்தைப் பரவலாக உண்டாகிய பிறகு இதைச் சரி செய்வதற்கு நம்மால் என்ன செய்ய முடியும் என்று அவர்களை யோசிக்க செய்ய வேண்டும். இதற்கும் நிர்வாகம் தான் முதல் நடவடிக்கையை எடுக்க வேண்டியிருக்கும்.

ஒவ்வொரு தொழிற்சாலை அல்லது அலுவலகத்திலும், தூய்மை பணியாளர்கள் என்று சிலர் இருப்பார்கள். ஆனால் இவர்களுடைய கடமைகள் – தரையை கூட்டி பெருக்குவது, மெழுகுவது

## கவிதைகள்

### அம்மா முத்தம்

இந்த உலகத்திலேயே
விலை கொடுத்து வாங்க முடியாத ஒன்று
முதன் முதலில் என் உச்சி நுகர்ந்து
என் அம்மா இட்ட முத்தம் மட்டுமே.

### நண்பன் , நட்பு

கடலும் கடல் அலையும்
பிரியாத உறவுகள் –நல்ல
நண்பனும் அவன் நட்பும் போல.

### மௌனம்

உண்மை பேசி யார் மனதையும்
நோகடிப்பதை விட மௌனம்
பேசி நகர்ந்து செல்வதே மேல்.

*Collected From Internet*

## ஹைக்கூ

சிலர் வாழ்க்கையில்
விடையாய் ...
சிலர் வாழ்க்கையில்
விடுகதையாய்...
மனைவி ...

## சிந்தனைக்கு

நீ வீணாக்கும் ஒவ்வொரு நொடியும்
உன்னை வறுமைக்கு தள்ளி விடும்.

திறமையற்று செய்ய இயலாமல் போகும் மனிதர்களை விட திறமையிருந்தும் தன்னுடைய சோம்பலால் அதை செய்யாமல் விடுபவர்களே ஏராளமானவர்கள் இருக்கின்றனர்.

நடந்து வந்த பாதைகளெல்லாம்
முள்வேலி தான்...
நடக்கின்ற பாதைகளும் கரடுமுரடுதான் ...
நடக்கபோகும் பாதைகளும் துன்பம்
துயரம் தான்...
நம்பிக்கை ஒன்றே நம் காலணி...
நினைவுகள் மட்டுமே நிவாரணம்...!

*Collected From Internet*

**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**

**– Editor**

போன்றவற்றோடு முடிந்து விடும். முக்கியமான இயந்திரங்களை இவர்கள் தொட கூடமாட்டார்கள்.

ஏனெனில், இயந்திரங்களை, அதிலும் குறிப்பாக நுணுக்கமான பாகங்களைக் கொண்ட இயந்திரங்களைச் சுத்தம் செய்வதற்கு நிறைய கவனமும் பொறுமையும் தேவை. ஆகவே, நாம் இதைத் தொட்டால் ஏதேனும் வம்பு வந்து சேருமோ என்று தான் பயப்படுவார்கள்.

உதாரணமாக எல்லாக் கணினி மென்பொருள் நிறுவனங்களிலும் சுத்தம் செய்வதெற்கென்றே சில யூனி:பார்ம் பையன்கள்உலவி கொண்டிருப்பார்கள். இவர்களுடைய புண்ணியத்தில் எங்கே பார்த்தாலும் தரை மின்னும், பாத்ரூம் பளபளக்கும் துண்டுக் காகிதங்கள் ஆங்காங்கே பறக்காது குடித்து முடித்த காபிக் கோப்பைகள் சரியாகக் குப்பைத் தொட்டியில் சென்று சேரும்.

ஆனால், விநோதமான விஷயம் என்னவெனில், இப்படிப் பளிச்சிடும் சுத்ததோடு இருக்கிற அலுவலகத்தின் கணினித் திரைகளை எட்டி பார்த்தால், அவற்றின் மீது அரை சென்டி மீட்டர் ஆழத்துக்கு தூசு படிந்திருக்கும். கீ போர்ட் விசைகளுக்கு இடையே பிஸ்கட் துணுக்குகளில் தொடங்கி, சாண்ட்விச் மிச்சங்கள் வரை என்னென்னவோ சிதறிக் கிடக்கும்.

இது போன்ற தூசுகள் அல்லது அழுக்குத் துகள்கள் கணினியின் உள் பகுதிகளில் சென்றால், மொத்த கம்ப்யூட்டரும் இயங்காமல் தொங்கி விடுகிற அபாயங்கள் உண்டு. இந்த விஷயம் நன்றாக தெரிந்திருந்தும் கூட, இந்த அசுத்தங்கள் உடனே களையப்படுவதில்லை.

1. சுத்தம் செய்கிற பையன்களுக்கு, கம்பீயூட்டரைத்தொடுவதற்கு பயம்.
2. கம்ப்யூட்டரைப் பயன்படுத்துகிறவர்களுக்கு, இந்த அழுக்கெல்லாம் கண்ணில் படுவதில்லை.

இப்போது பிரச்சனைக்கு காரணமான அடிப்படை காரணங்களான இந்த இரண்டுக்குமே மருந்து கண்டுபிடித்தாக வேண்டும். அப்போது தான் இதனை முழுவதுமாகத் தீர்க்க முடியும்.

(தொடரும்)

सत्यमेव जयते

**Government of India**
**And**
**Government of Tamil Nadu**
**Form GST REG-25**

**Certificate of Provisional Registration**

| | | | |
|---|---|---|---|
| 1. | GSTIN | 33AABCT9790N1ZN | |
| 2. | PAN | AABCT9790N | |
| 3. | Legal Name | TI ANODE FABRICATORS PVT | |
| 4. | Trade Name | TI ANODE FABRICATORS P LTD | |
| 5. | Registration Details under Existing Law | | |
| | Act | | Registration Number |
| (a) | Corporate Identity Number / Foreign Company Registration Number | | U28112TN2003PTC052052 |
| (b) | Importer / Exporter Code Number | | 0404012523 |
| Date | 26/06/2017 | | |

This is a Certificate of Provisional Registraion issued under the provisions of the Act.